## சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – 2011–2012ம் ஆண்டில் ஆதிதிராவிடர் நல மாணவ / மாணவியர் விடுதிகளில் விடுதிக் கட்டிடங்கள் பழுதுபார்த்தல் / அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் / சிறப்பு பராமரிப்பு / கூடுதல் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள ரூ.7633.46 இலட்சம் நிர்வாக / நிதிஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

(ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல (ஆதிந 2) துறை)

அரசாணை (நிலை) எண்.57 நாள்: 4.7..2011

ஆனி 19, திருவள்ளுவர் ஆண்டு 2042.

படிக்கப்பட்டது

1. தாட்கோ மேலாண்மை இயக்குநர் கடித எண். C/1453/2011/TO2, நாள் 28.4.2011 மற்றும் 3.5.2011 (ம) 17.6.11
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித எண்.க4/8481/2011, நாள் 9.5.2011

------

ஆணை:–

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் மாணவர்கள் பெரும் அவதிக்குள்ளாவது தொடர்பான செய்திகள் அரசின் கவனத்திற்கு வந்ததையடுத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆதிதிராவிட மாணவர்கள் நல்ல அமைதியான, சுகாதாரமான சூழ்நிலையில் தங்கி கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்துடன், இவ்விடுதிகளை பழுதுபார்த்து, அடிப்படை வசதிகளை மேம்படுத்திப் பராமரிக்கலாம் என்ற அடிப்படையில் உரிய மதிப்பீடுகள் தயார் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

2. இதனடிப்படையில் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், மாவட்ட தாட்கோ இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த இளநிலைப் பொறியாளர்கள் இணைந்து அந்தந்த மாவட்டங்களிலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறை விடுதிகளில் கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைந்து ஆய்வு செய்து விடுதிகளின் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு /கூடுதல் கட்டுமான பணிகளை மேற்கொள்ளத் தேவையான மதிப்பீடுகளின் அடிப்படையில், பார்வையில் படிக்கப்பட்ட கடிதங்களில் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர், தாட்கோ மேலாண்மை இயக்குநர் ஆகியோர் மாவட்ட வாரியாக / விடுதிவாரியாக சிறப்பு பராமரிப்பு பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொள்ள ரூ.7633.46 இலட்சத்திற்கான மதிப்பீட்டுடன் செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள்.

3. இதனை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று ஆதிதிராவிட மாணவ / மாணவியர் நல்ல அமைதியான சுகாதாரமான சூழ்நிலையில் தங்கி கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்துடன், இவ்வரசாணையின் இணைப்பு 2–ல் குறிப்பிட்டுள்ளவாறு இத்துறையின்கீழ் இயங்கும் 1059 விடுதிகளில் பழுதுபார்ப்பு / சிறப்பு பராமரிப்பு /கூடுதல் கட்டுமானப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.7633.46 இலட்சத்திற்கு (ரூபாய் எழுபத்தாறு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரம் மட்டும்) நிர்வாக மற்றும் நிதிஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:—

| | |
|---|---|
| 2225. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் / 01. ஆதி திராவிடர் நலன் – 277– கல்வி–I திட்டத்தில் சேராதது –AE மாணவர் இல்லங்கள் 17 00 சிறுபணிகள் (த.தொ.கு 2225 01 227 AE 1706) | ரூ.11,20,06,000 |
| 18 02 சிறப்பு பராமரிப்பு – (த.தொ.கு.2225 01 277 AE 18 22) | ரூ.24,52,24,000 |
| 42 00 பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள் (த.தொ.கு.2225 01 277 AE 42 03) | ரூ.8,48,16,000 |
| 4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனம் செலவு – 01 ஆதி திராவிடர் நலன் – 277– கல்வி–JA ஆதிதிராவிடர், மாணவர் இல்லங்கள் கட்டுதல் – 16 பெரும்பணிகள் (த.தொ.கு 4225 01 227 JA 16 03) | ரூ.32,13,00,000 |
| மொத்தம் | ரூ.76,33,46,000 |

5) மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்கப்படாமல் தாட்கோவின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது.

"K. வைப்பீடுகள், முன்பணங்கள், (b) வட்டி பெறாத வைப்புத் தொகைகள் 8443 00 உரிமையியல் வைப்புத் தொகைகள் - 800 பிற வைப்புத் தொகைகள் BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழக வைப்புத் தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் (தாட்கோ)"
(DPC 8443 00 800 BY 00 0G ( Receipts)
(DPC 8443 00 800 BY 00 04) (Outgo)

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுத் துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை பெறும் வரை இத்திட்டத்திற்கான ஆரம்ப செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன் பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெற வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் நகலினையும் இணைத்து நிதி (வ.செ.பொது–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு, ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். 2011–2012–ம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினத்தை சேர்ப்பதற்குரிய விளக்கக்குறிப்பினை நிதி(வரவு செலவு பொது–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறும் ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று இணைப்பு 2–ல் குறிப்பிட்டுள்ள விடுதிகளுக்கு பழுதுபார்ப்பு / சிறப்பு பராமரிப்பு / கூடுதல் கட்டுமானம் / அடிப்படைவசதி ஆகிய பணிகளை மேற்கொள்ள தாட்கோ மேலாண்மை இயக்குநருக்கு வழங்க ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது. மேற்படி பணிகள் அனைத்தும் இதற்கென வரையறுக்கப்பட்ட மதிப்பீட்டிற்குள் இருத்தல் வேண்டும் எனவும் பணிகள் அனைத்தும்

பொதுப்பணித்துறையால் வரையறுக்கப்பட்ட நடைமுறை விதிகளின்படியும் வழிகாட்டு நெறிமுறைகளின் படியும் (Guidelines) இருத்தல் வேண்டும் எனவும், இதற்கான செலவினம் ரூ.7633.46 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள பணிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீட்டைத்தவிர கூடுதல் நிதி கோரப்படக்கூடாது என்றும் ஆணையிடப்படுகிறது.

8. இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பழுதுபார்ப்பு / கூடுதல் கட்டுமானம் / பாரமரிப்பு /அடிப்படை வசதி மேம்பாட்டு பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் முடிக்க கால அட்டவணை ஒன்றினை தாட்கோ, மேலாண்மை இயக்குநருடன் கலந்து தயார் செய்யும்படியும், இப்பணிகளின் முன்னேற்றத்தினை உன்னிப்பான முறையில் கண்காணிக்கவும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை முடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்தி கொள்ளும்படியும் ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இப்பணிகளின் முன்னேற்ற அறிக்கை ஒன்றினை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் மற்றும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கட்டுமான / பராமரிப்பு பணிகளின் விரைவு மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்தி கொள்ளும்படியும் அதை உரிய முறையில் கண்காணிக்குமாறும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணையின் இணைப்பு 1–ல் குறிப்பிட்டுள்ள நெறிமுறைகளின்படி கூடுதல் கட்டுமானம் / பழுதுபார்ப்பு பராமரிப்பு அடிப்படை வசதிகளை மேற்கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். பணிகளை குறிப்பிட்ட கால வரையறைக்குள் மேற்கொள்ளப்பட்டு அதன் விவரத்தை 3 மாதங்களுக்குள் அரசுக்குத் தெரிவிக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10 இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.116 / இ.செ(எம்.வி.எம்)ஆதி(ம)பந/11, நாள் 2.7.2011ல் அதன் இசைவினைப் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 196 (நூற்று தொண்ணூற்று ஆறு)

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலன் சென்னை–5.
இயக்குநர் பழங்குடியினர் நலம், சென்னை–5
மேலாண்மை இயக்குநர், தாட்கோ சென்னை–101.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் (சென்னை தவிர)
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ
சம்பள கணக்கு அலுவலர், சென்னை.5/35/1
மாநில கணக்காய்வுத் தலைவர் சென்னை–35/6/
முதன்மை கணக்காய்வுத் தலைவர் சென்னை–18.
<u>நகல்:–</u>
நிதி(அதி(ம)பந/வசெபொI/வசெபொII)துறை சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை
அமைச்சர் ஆதி(ம)பந அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலரின் தனிச் செயலர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சென்னை–5.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு –1

## அரசாணை (நிலை) எண். 57,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 4.7.2011

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் பழுதுபார்ப்பு / பராமரிப்பு / அடிப்படை வசதி மேம்பாடு / கூடுதல் கட்டுமான பணிகளை மேற்கொள்ளுவதற்கான வழிகாட்டுதல்கள்

1. அனைத்து பணிகளும் மொத்த வகை ஒப்பந்தம் புள்ளிகளாக (Lumpsum Contract) திறந்தவெளி ஒப்பந்தபுள்ளி முறையில் செயல்முறைபடுத்தப்பட வேண்டும்.
2. பணிகளின் விவர மதிப்பீடுகள் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல் மற்றும் செயல்முறைப்படுத்துதல் அடிப்படையிலேயே தயாரித்து தொழில் நுட்ப ஒப்பளிப்பு பெற வேண்டும்.
3. பழுதுபார்த்தல் பணி செய்வதற்கு முன் கட்டிடத்தின் நிலை பழுதுபார்த்ததற்கு பின் கட்டிடத்தின் மாற்றம் இவை தகுந்த தெளிவான புகைப்பட ஆவணங்களுடன் அளவுப்புத்தக பதிவு விபர தொடர்புடன் பதிவு செய்யப்படவேண்டும்.
4. பழுதுபார்த்தல் பணிக்கு பயன்படுத்தப்படும் குழாய்கள், பைப்புகள், ஃபிட்டிங்ஸ், கதவு, சன்னல், தாழ்ப்பாள், மின் உபகாரணங்கள், மின் உயர்கள் அனைத்துமே ISI சான்றிதழ் பெற்ற நிறுவனத்திடமிருந்து உத்திரவாத சான்றிதழுடன் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.
5. பணிக்கான முகவர் நியமித்தபிறகு செயற்பொறியாளர் பணிமுன்னேற்ற காலஅட்டவணையினை தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருடன் கலந்தாலோசித்து இறுதி செய்ய வேண்டும்.
6. மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் விடுதிக்கட்டிடம் பழுதுபார்க்க ஏதுவாக மாணாக்கர்களை பாதுகாப்பாக அருகாமையில் அனைத்து வசதிகளுடன் தங்க மாற்று ஏற்பாடு செய்துதர வேண்டும்.
7. மாவட்ட ஆட்சியர் அவர்கள் தங்களது முகாமின்போது பணிகளை பார்வையிட்டு குறித்த காலத்தில் பணிகளை முடிப்பதோடும் பணியின் தரம்குறித்தும் பொறியாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்க வேண்டும். குறைபாடுகள் ஏதும்

இருப்பின் தாட்கோ மேலாண்மை இயக்குநர் மற்றும் ஆதிதிரவிடர் நல ஆணையர் ஆகியோருக்கு உடன் தெரிவித்திடல் வேண்டும். மாதாந்திர ஆய்வுக்கூட்டத்தில் இப்பணிகள் குறித்தான முன்னேற்றம் ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

8. பழைய கட்டிடம் இடித்து கிடைக்கும் தளவாட சாமான்கள் மதிப்புடையதாக இருப்பின் அவை மீள கட்டிடத்திற்கு உரிய பதிவுகளுடன் பயன்படுத்தப்படுதல் அல்லது ஏலமுறையில் விற்பனை செய்து அரசு வருவாயில் செலுத்தவேண்டும்.

9. அனைத்துப்பணிகளும் முறையாக பிரிவு அலுவரால் அளவுப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு உதவி செயற்பொறியாளரால் அளவுகள் சரிபார்க்கப்பட்டு செயற்பொறியாளரால் 30 % அளவுகள் மேலொப்பம் செய்தபின்தான் பட்டியல்கள் ஒப்பந்தகாரருக்கு பட்டுவாடா செய்யப்படல் வேண்டும்.

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.